## சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 13.1.2011 அன்று சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசும்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – கிராம ஊராட்சிகளில் பணியாற்றி வரும் மேல்நிலை நீர் தேக்க தொட்டி இயக்குபவர்களது தொகுப்பூதியம் 1.1.2011 முதல் ரூ.2000/– என நிர்ணயித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ5) துறை

அரசாணை (நிலை) எண்.15 நாள் : 07.02.2011

படிக்கப்பட்டவை.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர் கடிதம் ந.க.எண்.65371/09/இ1, நாள் 12.1.2011.

-----

**ஆணை:**

13.01.2011 அன்று சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

"கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்கும் பணியினை மேற்கொள்ளும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு தற்போது ரூ.1150/– தொகுப்பூதியமாக நிர்ணயிக்கப்பட்டு தற்காலிக உயர்வுகளையும் (Adhoc increase) சேர்த்து மாதம் ரூ.1510/– வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுடைய ஊதியத்தை இவர்களுடைய பணியின் தன்மை மற்றும் நீண்டகால கோரிக்கையினை கருத்தில் கொண்டு 01.01.2011 முதல் தொகுப்பூதியம் ரூ.2000/– என நிர்ணயித்து வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 40,000 பேர் பயன் பெறுவர்".

2. இதற்கிடையில், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ள கருத்துருவில், கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்கும் பணியினை மேற்கொள்ளும் பணியாளர்கள் பகுதி நேரப் பணியாளர்கள் ஆவர் என்றும், சராசரியாக ஒரு ஊராட்சிக்கு இரண்டு நபர்களிலிருந்து ஐந்து நபர்கள் வீதம் பணிபுரிந்து வருகின்றனர் என்றும், தற்போது மாநிலம் முழுவதும் சுமார் 43,364 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் இவர்களுக்கு தொகுப்பூதியம் மற்றும் தற்காலிக ஊதிய உயர்வுகளையும் சேர்த்து தற்போது மாதம் ரூ.1510/– கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது என்றும் இவர்களுடைய பணியின் தன்மை மற்றும் நீண்டகால கோரிக்கையினை கருத்தில் கொண்டு

இவர்களுக்கு 01.01.2011 முதல் தொகுப்பூதியம் ரூ.2000/– என நிர்ணயித்தும், அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்கும் தருணம் தற்காலிக உயர்வாக ரூ.40/– (வழக்கம்போல்) அரசாணை (நிலை) எண். 234, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 01.06.2009ல் தெரிவித்துள்ளபடி வழங்கிடலாம் எனவும் பரிந்துரைத்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை ஏற்று கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பகுதிநேரப் பணியாளர்களான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்களின் தொகுப்பூதியத்தை 01.01.2011 முதல் மாதமொன்றுக்கு ரூ.2000/– என்று நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

4. வருங்காலங்களில், அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு முறை அகவிலைப்படி வழங்கும் போதும் அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 01.6.2009ல் உள்ளவாறு தற்காலிக உயர்வாக (adhoc increase) ரூ.40/– அனுமதிக்கப்படும்.

5. இதற்கான செலவினம் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 7869 / ஊபி / 2011–1, நாள் 07.02.2011ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதிகணக்கு துறை, சென்னை–108.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35/6.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை சென்னை
<u>நகல்</u>
நிதி (ஊரக வளர்ச்சித்) துறை, சென்னை–9.
நிதி (ஊதியக்குழு) துறை, சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து பிரிவுகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்